மாவட்ட ஆணை எண்.144/2020
ந.க.எண்.அ2/3612/2019
நாள்: 07.04.2020.

மாவட்ட காவல் அலுவலகம்,
அரியலூர் மாவட்டம்.

**பணிவரன்முறைப்படுத்துதல் ___ ஆணை**

பொருள் : காவல் - அரியலூர் மாவட்டம் - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளராக (Group – IV) தேர்வு செய்யப்பட்ட தேர்வாளர் செல்வி.ப.ஆனந்தப்ரியா என்பவரை இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்துதல் - தொடர்பாக.

பார்வை : 1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணை குழுமம், சென்னை அவர்களின் கடித எண்.1351/PSD-G1/2019, நாள்.18.02.2019.
2. தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.004813/NGB.II(1)/2018, நாள். 06.03.2019.

******

பார்வையில் கண்டுள்ள ஆணைகளின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வு குழுமத்தால் இளநிலை உதவியாளர்களாக காலி பணியிடங்களுக்கு குரூப்-4 தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு இளநிலை உதவியாளராக செல்வி.ப.ஆனந்தப்ரியா என்பவர் சென்னை இரயில்வே அலுவலகத்தில் 20.03.2019 மு.ப. பணிக்கு அறிக்கை செய்துள்ளார். பின்னர் பணியிட மாறுதலில் அரியலூர் மாவட்டத்தில் 09.01.2020 மு.ப. அன்று பணிக்கு அறிக்கை செய்து பணிப்புரிந்து வருகின்றார். மேற்கண்ட இளநிலை உதவியாளர் பணிக்கு அறிக்கை செய்த நாளில் 20.03.2019 மு.ப. முதல் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, இவரது இளநிலை உதவியாளர் பதவிக்கான பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

"நியமனதாரரின் இளநிலை உதவியாளர் பதவிக்கான பணி நியமனம் தற்காலிகமானது. இச்சூழ்நிலையில் இத்தெரிவுகள் (Combined Subordinate Services Exam – Group-IV 2015-16, 2016-17 and 2017-18 ) தொடர்பான ரிட் மனுக்கள் சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்றங்களிலும் மற்றும் பிற குற்றவியல் வழக்குகளும் நிலுவையில் உள்ளதால், அவ்வழக்குகளில் வழங்கும் தீர்ப்புகளுக்கு கட்டுப்பட்டு, பணிகள் வரன்முறை செய்யப்படுகிறது"

2. மேலும், இவர் பணியேற்பு செய்த நாள் முதல் 3 ஆண்டு காலம் தொடர்ச்சி பணியில் 2 ஆண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். மேலும், தகுதிகாண் பருவ காலத்தில் பவானி சாகர் அடிப்படை பயிற்சித் தேர்வுகள் மற்றும் துறை தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படுகிறது.

ஒம்/-வீ.இரா.சீனிவாசன்,
காவல் கண்காணிப்பாளர்,
அரியலூர் மாவட்டம்.

பெறுநர்
செல்வி.ப.ஆனந்தப்ரியா, இளநிலை உதவியாளர், மாவட்ட காவல் அலுவலகம், அரியலூர் மாவட்டம்.
நகல்: காவல்துறை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை - 4.
நகல்: காவல்துறை துணைத்தலைவர், திருச்சி சரகம், திருச்சி.
நகல்: மாவட்ட ஆணை புத்தகம் மற்றும் உதிரி.

//உ.ந.உ.அ.ப.//

9/4

நிருவாக அலுவலர்,
மாவட்ட காவல் அலுவலகம்,
அரியலூர் மாவட்டம்.

9/4/2020